**Deposition of witness**

**IN THE COURT OF DISTRICT MUNSIF, MELUR**

| | | |
|---|---|---|
| O.S.No | : | 19/2025 |
| Deposition of Witness for | : | |
| Court | : | District Munsif Court, Melur. |
| Name | : | குமரன் |
| Father’s name | : | சுப்பையா |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of of the 26th day of June 2025

26.06.2025

O.S.No.19/2025

வா.சா.1 .திரு.குமரன், த.பெ.சுப்பையா

சாட்சி இன்று அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்

**முதல் விசாரணை**

நான் இந்த வழக்கின் வாதி ஆவேன். வாதி தரப்பு 1வது சாட்சி ஆவேன். எனது சாட்சியத்தை நிரூபண வாக்குமூலமாக தாக்கல் செய்கிறேன். அதில் உள்ள விவரங்கள் எனக்குத் தெரியும். அதை நான் சொல்லச் சொல்ல எனது வழக்கறிஞரால் தயார் செய்யப்பட்டு, என்னால் சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டு என்னால் கையெழுத்து செய்யப்பட்டது. நானும், எனது மனைவியும் சேர்ந்து சேதுமாதவன் என்பவருடன் செய்து கொண்ட கிரைய ஒப்பந்தம் அசல் **வா.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 23.10.2024ம் தேதிய கிரைய ஆவணம் சான்றிட்ட நகல் **வா.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது. எனது பெயரில் உள்ள பட்டா கணினி நகல் பட்டா எண்.3603 **வா.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 1425ம் பசலிக்குரிய அடங்கல் **வா.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. தாவா சொத்து மற்றும் பிற சொத்துக்கள் என் பெயரில் உள்ளதற்காக 'அ' பதிவேடு கணினி நகல் **வா.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. 07.09.2015ம் தேதி மேலவளவு காவல் நிலையத்தில் நான் கொடுத்த புகார் மனுவின் கைநகல் **வா.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. வழக்குப்படி தீர்ப்பாக பிராத்திக்கிறேன்.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு "சரி" என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேலூர்.